Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4 00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (23 - 01 - 1991) புதன்கிழமை ஓசை 339

## விலை நிர்ணயத்தைத்தொடர்ந்து பொருள்கள் மாய மறைவு

(செ. த. மை)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கம் விலைநிர்ணயம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வர்த்தகர்கள், சில்லறை வியாபாரிகள், பாவனையாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பாவனையாளர்களின் நலன்கருதி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் வர்த்தகர் சங்கத்துடன் நடாத்திய கலந்துரையாட (4 ஆம் பக்கம் பார்க்க)

## வளைகுடா நிலைமை

★ வளைகுடாப் பிரச்சினை குறித்து கலந்தாலோசிக்குமாறு நான்கு ஐரோப்பிய மற்றும் மத்தியகிழக்கு நாடுகளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

★ வளைகுடாப் பகுதியில் ஆகாயமார்க்கமான போர் வெற்றிகரமாக நடைபெறாத பட்சத்தில் குவைத்துக்கும், ஈராக்கிற்கும் பன்னாட்டு தரைப்படையை அனுப்புவது என்ற சட்டத்திற்கு ஜோர்ஜ் புஷ் அங்கீகாரம் வழங்கியுள்ளார் என நியூஸ்வீக் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

★ ஈராக்கிய ஆக்கிரமிப்பில் இருந்து குவைத் விடுவிக்கப்பட்ட பின்னர் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்ற செயலையே உலகநாடுகள் மேற்கொள்ள வேண்டும் என ஜோர்ஜ் புஷ் கேட்டுள்ளார்.

★ பன்னாட்டுப் படையினரின் தாக்குதல் மிகக் குறுகிய ஒரு காலத்தில் சாத்தியமான அளவிற்கு மிகமிக குறைவான ஆட்கள் சேதத்துடன் முடிவடைந்து விடுமென்றும் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

★ அமெரிக்காவினதும் நேசநாடுகளினதும் துருப்புக்கள் குவைத்துக்குள் வந்தால் அவர்கள் திரும்பிப் போவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார். பாக்தாத் வானொலியில் உரையாற்றிய அவர் இவ்வாறு செய்தால்தான் ஈராக்கின் பலம் அவர்களுக்குத் தெரியும் என்றும். அமெரிக்காவிற்கும், பிரித்தானியவிற்கும் நல்ல பாடம் புகட்டுவோம் என்றும் சதாம் ஹுசைன் தெரிவித்தார்.

★ ஈராக்கில் வசிக்கும் சகல வெளிநாட்டவர்களும் தாங்கள் வசிக்கும் வாழ்விடங்கள் பற்றிய தகவல்களை இன்னும் 48 மணி நேரத்தில் ஈராக்கிய தூதரகத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென ஈராக்கிய வெளியுறவு அமைச்சகம் கேட்டுள்ளது.

★ மேலைநாடுகளின் செய்தி நிருபர்களை ஈராக்கில் இருந்து வெளியேற்றினாலும் அமெரிக்க சி. என். என். (Cable News Network) தொலைக்காட்சி செய்தியாளர்களை மட்டும் அங்கு தொடர்ந்து தங்கியிருக்கும்படி ஈராக் அனுமதியளித்திருக்கிறது.

★ ஏற்றத்தாழ்வுகளை கொண்ட வளைகுடா யுத்தத்தை நிறுத்தும் முயற்சியில் அனைத்து இஸ்லாமிய நாடுகளும் ஒருங்கிணைய வேண்டும் என ஈரானிய ஜனாதிபதி அலி அக்பர் ரப்சன் ஜானி கேட்டுக்கொள்கின்றனர்.

★ வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக சமாதான தூதொன்றை மேற்கொண்டு பாகிஸ்தானிய பிரதமர் நவாப் ஷெரீப் நேற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றார்.

# யாழ். குடா நாடெங்கும் விமானத் தாக்குதல்கள்

## பலர் காயம், ஆஸ்பத்திரி உட்பட கட்டடங்கள் பலத்த சேதம்

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப்படையின் தொடர்ச்சியான விமான, ஷெல் தாக்குதல் யாழ் குட நாடெங்கும் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதலில் எரிகுண்டுகளும் பாவிக்கப்பட்டன. இக்குண்டுவீச்சினால் ஆஸ்பத்திரி, வீடுகள், கடைகள் அழிந்தன. பலர் படுகாயம் அடைந்தனர்.

வல்வெட்டித்துறையில் தொடர்ந்து மூன்றாவது நாளாக காலை 7 மணியிலிருந்து இரவு 12 ரக விமானமும் அவ்ரோ விமானங்களும் கட்டிடங்களை தகர்க்கும் வகையில் பாரிய எரி குண்டுகளை வீசின. நேற்று மட்டும் நான்கு தடவைகள் இந்த விமானக் குண்டுவீச்சுகள் இடம்பெற்றன. எரிகுண்டு வீச்சால் பல வீடுகள் தீக்கிரையாகின.

சாவகச்சேரியில் பிரதான தபாற்கந்தோர் அருகில் நேற்று இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின. சாவகச்சேரியைச் சேர்ந்த க. தவசி என்ற மூதாட்டி (வயது 60)

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் வீசிய 2 குண்டுகள் மானிப்பாயில் வெடிக்கவில்லை

(மானிப்பாய்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு நேற்று நண்பகல் 12 மணியளவில் மானிப்பாய் பகுதியை பல தடவைகள் வட்டமிட்டபின் அடுத்தடுத்து 3 குண்டுகளை சுதுமலைச் சந்தியில் வீசியது. இதில் இரண்டு குண்டுகள் நிலத்தில் புதைந்து வெடிக்காத நிலையில் காணப்படுகின்றன. இதில் வழிப்போக்கரான சிவபாலன் (வயது 40 மாதகல்) என்பவர் காயமடைந்தார்.

இத் தாக்குதல் நடைபெற்ற போது மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு பரீட்சை நடந்துகொண்டிருந்தது. இதனால் மாணவர்கள் சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (ச) (85)

## இந்திய ராணுவத்தால் சூடு; சிறிலங்கா ராணுவத்தால் தகர்ப்பு

(கிளிநொச்சி)

இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவரின் வீட்டை இலங்கை விமானப் படை குண்டு வீசி தகர்த்தது.

நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கனகபுரம் எனும் இடத்தில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நாயகம் என்பவரின் வீடு முற்றாக சேதமடைந்தது. அவரது வீட்டில் நின்ற மற்றொருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இவ் வீட்டு உரிமையாளர் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்

சகம் கேட்டுள்ளது.

★ மேலைநாடுகளின் செய்தி நிருபர்களை ஈராக்கில் இருந்து வெளியேற்றினாலும் அமெரிக்க சி. என். என். (Cable News Network) தொலைக்காட்சி செய்தியாளர்களை மட்டும் அங்கு தொடர்ந்து தங்கியிருக்கும்படி ஈராக் அனுமதியளித்திருக்கிறது.

★ ஏற்றத்தாழ்வுகளை கொண்ட வளைகுடா யுத்தத்தை நிறுத்தும் முயற்சியில் அனைத்து இஸ்லாமிய நாடுகளும் ஒருங்கிணைய வேண்டும் என ஈரானிய ஜனாதிபதி அலி அக்பர் ரப்சன் ஜானி கேட்டுக்கொள்கின்றனர்.

★ வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக சமாதான தூதுஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தானிய பிரதமர் நவாப் ஷெரீப் நேற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றார்.

★ சமாதான முயற்சியை மேற்கொண்டு அணிசேரா இயக்கத் தலைவரைச் சந்திப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்லா பெல்கிரேட் சென்றுள்ளார்.

★ வளைகுடாப் போரின் இலக்கு குவைத்தின் விடுதலையே தவிர ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனை கொலை செய்வதோ அல்லது அவரது நாட்டை நிர்மூலம் செய்வதோ அல்ல என்று பிரான்சின் ஜனாதிபதி மித்ரோன் தெரிவித்துள்ளார்.

★ பன்னாட்டுப் படையினரின் ஒரு குறிப்பிட்ட இலக்கு ஈராக்கின் மிக நவீனமானதும், நேர்த்தியானதுமான குடியரசுக் காவல்படை (Republican Guard) என அழைக்கப்படும் படையேயாகும் என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரி தெரிவித்தார்.

★ போர்க் கைதிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்படுவர் என்ற ஈராக்கின் அறிவிப்பை அவுஸ்திரேலியா, ஜப்பான், சீனா உட்பட மேற்கத்தைய நாடுகள் கண்டனம் செய்துள்ளன.

★ ஈராக்கிய ஆயுதக்கிடங்குகளை அறிய மிக நவீன இரகசிய மின்னணுச் சாதனங்களை அமெரிக்கா பயன்படுத்தி வருவதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

★ வளைகுடாப் போரின் நிலையை சமாளித்து உலகச் சந்தையின் உறுதிப்பாட்டை பராமரிக்க ஏழு தொழில்வள நாடுகள் முன்வந்துள்ளது. வெளிச் செலாவணிச் சையிராப்பு நிலைமைகளைக் கண்காணிப்பதன் மூலம் பராமரிப்பை மேற்கொள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, யப்பான், சீனா ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன.

★ ஜம்மு, காஷ்மீரில், ஐ. நா. பார்வையாளர் அலுவலகத்தின் முன்பாகவும், சென்னை நகரத்தில் அமெரிக்க கான்சலேட் ஆலயத்தின் முன்பாகவும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று இடம்பெற்று உள்ளன. சென்னையில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் பன்னிரெண்டுபேர் காயமுற்றனர்.

★ இந்தோனேசியாவின் இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரவாதிகள் அமைப்பு ஈராக்கிற்கு ஆதரவாக போரிடத் தயாரென அறிவித்துள்ளது.

★ உலகத் தலைவர்கள் பலரும் வளைகுடாவில் அமைதி ஏற்படுத்தும் முன் முயற்சிகளை மேற்கொள்வதில் முனைந்துள்ளனர்.

★ அமெரிக்க, பிரிட்டிஷ், இத்தாலிய விமானங்களுடன் பிரான்சின் ஜாகுவார் விமானங்களும் இணைந்து குவைத் நகரத்திற்கு அருகே ஈராக் கடற்படைத் தளமொன்றைக் குண்டுமழை பொழிந்து அழித்ததாக கூறப்படுகின்றது.

★ போரின் முதற்கட்டத்தில் ஈராக் வெற்றி அடைந்திருப்பதாக பக்தாத் வானொலியை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

(மானிப்பாய்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு நேற்று நண்பகல் 12 மணியளவில் மானிப்பாய் பகுதியை பல தடவைகள் வட்டமிட்டபின் அடுத்தடுத்து 3 குண்டுகளை சுதுமலைச் சந்தியில் வீசியது. இதில் இரண்டு குண்டுகள் நிலத்தில் புதைந்து வெடிக்காத நிலையில் காணப்படுகின்றன. இதில் வழிப்போக்கரான சிவபாலன் (வயது 40 மாதகல்) என்பவர் காயமடைந்தார்.

இத் தாக்குதல் நடைபெற்ற போது மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஒரு பரீட்சை நடத்துகொண்டிருந்தனர். இதனால் மாணவர்கள் சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (ச) (85)

சிறிலங்காராணுவத்தால் தகர்ப்பு

(கிளிநொச்சி)

இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவரின் வீட்டை இலங்கை விமானப் படை குண்டு வீசி தகர்த்தது

நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கணேசபுரம் எனும் இடத்தில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசியதில் தர்மநாயகம் என்பவரின் வீடு முற்றாக சேதமடைந்தது. அவரது வீட்டில் நின்ற மரம் ஒன்று எரிந்து, தீயையே உமிழ்ந்தது.

இவ் வீட்டின் உரிமையாளர் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (49)

# பெரியபண்டிவிரிச்சானிலும் தீவிரமான குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரிய பண்டிவிரிச்சின் பகுதியில் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் குண்டுவீச்சு தாக்குதல்கள் இடம்பெற்றன.

கடந்த 19 ஆம் திகதி குண்டுவீச்சுவிமானங்கள் ஒரு அவ்ரோ விமானம் ஒரு சிப்பினேன் மூன்று ஹெலிகொப்ரர்கள் எல்லாமாக ஒன்பது விமானங்கள் தாக்குதல் நடாத்தின.

இத்தாக்குதல்கள் பற்றிய சேதவிபரம் எதுவும் இன்னும் எமக்கு எட்டவில்லை.

# சேமமடு காட்டுப்பகுதியில் அகோரக் குண்டுவீச்சு;

## 10 விமானங்கள், 3 ஹெலிகள் பங்குபற்றின

வவுனியா மாவட்டத்தில் உள்ள சேமமடுகாட்டுப் பகுதியில் தொடர்ச்சியான அகோரக் குண்டுவீச்சு நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் ஏழு குண்டுவீச்சு விமானங்களும், 3 அவ்ரோ விமானங்களும் 3 ஹெலிகொப்ரருமாக 13 விமானங்கள் சுமார் மூன்று மணிநேரமாக இடைவிடாது தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதலில் அந்தக் காட்டுப் பகுதியின் பல்வேறு இடங்களில் தீப்பிடித்து எரிந்தது. மரங்கள் முறிந்துபோயிருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# திருமலையில் கண்ணிவெடி பல இராணுவத்தினர் பலி

(திருக்கோணமலை)

திருகோணமலை நகர்ப் பகுதிக்குள் இருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தற்பாதுகாப்பு கருதி கண்ணிவெடி தாக்குதல் நடாத்தியதில் பல சிறிலங்கா படையினர் உயிரிழந்தனர் என எமக்கு அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

நேற்று காலை ஒன்பது மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலில் இராணுவத்தினர் பயணம் செய்த வாகனம் சுக்குநூறாகியது.

# பிரஜைகள் குழு உறுப்பினர் முஸ்லிம் ஊர்காவற்படையால் திருமலையில் கடத்தல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்களில் ஒருவரான ஆணைசிவன் அண்மையில் நிலாவெளிப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். தனியாகச் சென்றபோது கடத்தப்பட்ட இவரைப் பற்றிய தகவலேதும் இதுவரை அறியப்படவில்லை

இது இவ்வாறிருக்க, அண்மையில் திருக்கோணமலை-கண்டி வீதியில் பாலம் போட்டாறுப் பகுதியில் பெருந்தொகையான நகைகளுடன் முஸ்லிம் ஊர்காவற்படையின் முக்கியஸ்தர் 'சலீம்' என்பவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

## தனியாருக்கு மருந்து கொண்டுவருவதற்கான

# சர்வதேசசெஞ்சிலுவைமுயற்சி வெற்றியளிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தனியார் மருத்துவ மனைகள், மருந்தகங்களுக்கான மருந்துப் பொருட்களை எடுத்து வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எடுத்த முயற்சிகள் எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை.

தனியார் மருத்துவ மனைகளின் சங்கத் தலைவர் டாக்டர் திரு. செல்வநாதன் மேற்படி விடயம்பற்றி கருத்து வெளியிடும்போது மருந்துப் பொருள்களை எடுத்து வருவதற்கு கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது என்று வெளிவந்த செய்தி பற்றி தமக்கு எதுவும் தெரியாது

(4ஆம் பக்கம் பார்க்க)

# மிதிவெடியில் சிக்கிய ராணுவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இருபதாம்திகதி இலவங்குளம் இராணுவமுகாமிலிருந்து முள்ளிக்குளம் பகுதிக்கு வந்த இராணுவத்தினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**நியூ வெஸ்ரோன் எலெக்ரோனிக் கோப்**

ரீ. வி, டெக், றேடியோ, மணிக்கூடு, நிவைண்டிங் மற்றும் எல்லாவிதமான மின்சார உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். இலக்கம் 741, மானிப்பாய் வீதி, ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(B/1893)


## சாரணிய ஆணையாளர் கூட்டம்

(உரும்பராய்)

யாழ். மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர்களின் கூட்டம் இன்று புதன் கிழமை மாலை 3.00 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாவட்ட ஆணையாளர் திரு. எ. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு மாவட்ட உதவி ஆணையாளர்கள் அனைவரையும் பங்குபற்றும் வண்ணம் கேட்கப்படுகிறார்கள்.

(32)

# இரண்டுநாள் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பயணிகளும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளும் குறைந்தது இரண்டு நாட்களேனும் மறித்து வைக்கப்பட்ட பின்னரே அவர்கள் தமது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர் என நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

இந்தப்பயணிகள் மேலும் கூறும்பொழுது தாம் கொழும்பிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்னர் பயணத்தை ஆரம்பித்ததாகவும் வவுனியா வந்தடைந்ததும் எம்மை இராணுவத்தினர் பயணத்தைத் தொடரமுடியாதென மறித்துவிட்டு ஓர் இரவு வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்திருந்த பின்னரே பயணத்தைத் தொடர அனுமதித்தனர் என்றும் கூறினர். (லோ)

## கோட்டை உருவில் "பாரக்கற்கள்"

(யாழ்ப்பாணம்)

கோட்டைச் சுவரில் இருந்து பெயர்த்தெடுத்த முருகைக் கற்களைக் கொண்டு கோட்டை வடிவிலான மேசைப் பாரக்கற்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன; இந்த முருகைக்கற்கள் விரைவில் பொதுமக்களுக்கு விற்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கோட்டைகளை உருவாக்கும் செயற்பாடுகளை யாழ் முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்கள் செய்து வருகின்றனர். இந்தக் கற்களைப் பெற்று கோட்டைகளாக உருவாக்குவதற்கு மனித வலு தவிர்ந்த வேறு எந்த பெரும் நிதிகளும் தேவையில்லை என இப்பிரிவின் பொறுப்பதிகாரியான எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார். (லோ)


## அம்மாக்கள் மாறவேண்டும்

தாயகம் இங்கு எரிந்திடும் வேளையில்
தானையிலிணைந்திட்ட தனயனைத் தடுக்கும்
பாதகம் இன்றும் நிறைய நடக்குது
பாசம் என்று பதறிடும் தாயவள்
தேசம் அழிவதை தடுத்திட முனைவீர்
தேகம் அழிவது இயற்கையில் காண்பீர்
மரணம் என்பது மடியிலும் நிகழும்
மானம் போனபின் பாசம் வாழ்வதா
வாசலில் நின்று வாழ்த்தி அனுப்பும்
வழக்கம் வேண்டும் பழகும் அம்மா!

- தனம்



## 'ஈழநாதம்' முதல் ஆண்டு நிறைவு

# போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன்முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon) ★ சிறுகதை
★ கவிதை ★ வாசகர் கடிதங்கள்.

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை.

★ படைப்புக்கள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்;

★ கருத்துப் படங்கள் 15செ.மீ x 12செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில், தெளிவான கை எழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும்.



## அரசாங்க அறிவித்தல்

### பாடசாலை வைத்திய அதிகாரி காரியாலயம்

இலக்கம் 94, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி என்ற முகவரியில் இதுவரை காலமும் இயங்கி வந்த "பாடசாலை வைத்திய அதிகாரியின் காரியாலயம்" (S. M. O's Office) குருநகரிலுள்ள அரசாங்க வைத்தியசாலையாகிய மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகிறேன்.

ந. கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

21. 01. 1991.

(B- 1906)



DHL WORLDWIDE EXPRESS

## வெளிநாட்டுக் கடிதங்கள்

உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே தபாலில் சேர்க்கப்படும்.

குறைந்த கட்டணம் ரூபா 20-00

விபரங்களுக்கு:

**Cosmos Marketing Services**
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(B-1825)



மில்க்வைற் திரவசவர்க்காரம்
சகல தேவை அழுக்கு நீக்கி
MILK WHITE LIQUID SOAP
ALL - Purpose Dirt Remover.



## நினைவு கூருகின்றோம்!

★ படைப்புக்கள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்;

★ கருத்துப் படங்கள் 15செ.மீ x 12செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில், தெளிவான கை எழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்

★ வாசகர் கடிதங்கள் இதுவரை வெளியானஈழநாதம் இதழ் பற்றிய விமர்சனப் பார்வையைக் கொண்டதாக அமைய வேண்டும்;

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப் படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்;

★ ஆக்கங்கள், இதற்குமுன்பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காகவெளிக்கப் பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது;

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் எதிர் வரும் பத்தாம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; எக் காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதுடன், பிந்திக் கிடைப்பவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப் படவும் மாட்டாது;

★ போட்டி முடிவுகள் யாவும் 17 - 02 - 1991 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். முதலாண்டு நிறைவு நாளில் முதலாவது பரிசு பெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்;

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத்தேர்ந்தெடுக்கப்படுபவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும். முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு முதலாண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடிதஉறையில் வலது பக்கமேல் மூலையில் குறிப்பிட்டு;

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

---

ந. கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

31. 01. 1991.

(B- 1908)

---


**மில்க்வைற் திரவசவர்க்காரம்**
**சகல தேவை அழுக்கு நீக்கி**
MILK WHITE LIQUID SOAP
ALL - Purpose Dirt Remover.

**சாதாரண வீட்டுச் சலவைக்கு பாவிக்கும் முறை**

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவையைத் துணியில் செறியச் செய்யவும்
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும் பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

(B-1912) — மில்க்வைற்


---


# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**வினா - விடை** வகுப்புக்கள்

**O/L**

**DAY CLASSES** (8.30 - 1.30)
ஆரம்பம்:- 28 - 1 - 91

**EVENING CLASSES** (3.00 - 5.45)
ஆரம்பம்:- 23 - 1 - 91

91 DEC O/L; ஆண்டு 6,7,8,9,10
புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 30 - 1 - 91

(B-1910)


---

யாழ்ப்பாணம்.

(B-1825)

---

# நினைவு கூருகின்றோம்!

## ஜனவரி 23

1987ஆம் ஆண்டு திருமலையில் தெசிவத்தை இராணுவமுகாம் சிப்பாய்கள்மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமடைந்த

**கப்டன் நேசன்** (இ. ஜெயச்சந்திரன் - செல்வநாயகபுரம்)

1988ஆம் ஆண்டு தெல்லிப்பளை முள்ளானையில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

**கப்டன் பல்லவன்** (சா. குகமணி - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

செங்கதிரின் ஒளியொன்று வீசும் - நம்
தேசத்தின் இருட்போர்வை விலகும்
எங்களது வயல்களில் நெல்மணிகள்
ஏகாந்தமாய் வளைந்து ஆடும்
பொங்கியெழும் கடல்நீரைக் கிழித்துப்
புதுக்கீதம் மீனினங்கள் பாடும்
செந்தமிழின் நிலம்காக்க உந்தன்
தேகத்தை ஈந்திட வாடா!

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1892)

**★ சிந்தனைக்கு ★**

உனக்கு அருகாமையில் இருக்கும் கடமையை முதலில் செய், அதன் பின் இரண்டாவது கடமை, தானாகத்தெளிவாகும்.

— தமாஸ் கார்னலஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 23-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# பௌத்த சிறிலங்காவின் இரட்டை வேடம்

"இலங்கை 'ஓர்' அகிம்சை வழி நாடு. எனவே இன்று நடைபெறும் யுத்தத்தைக் கண்டு கண்மூடித்தனமாக இருக்க விரும்பவில்லை."

"வளைகுடா பிராந்தியத்தில் யுத்தம் தீவிரமடைந்து செல்வதை முன்னிட்டும் அந்த யுத்தத்தின் காரணமாக அப்பாவி மக்களுக்கு ஏற்படும் அவலத்தினையும், உயிர்ச்சேதங்களையும் முன்னிட்டும் ஆழ்ந்த கவலை ஏற்படுகின்றது"

இவை வளைகுடா யுத்தம் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அவர்களுக்கு ஏற்பட்ட "கவலையின்" வெளிப்பாடாகும்;

வளைகுடாவில் யுத்தம் ஏற்பட்டு அங்கு அமெரிக்க நேச அணியினரால் மேற்கொள்ளப்பட்ட பெரும் எடுப்பிலான விமானத் தாக்குதலினால், ஈராக்கின் பல நகரங்கள் அழிந்தன. மக்கள் பெரும் துயரத்திற்கு உள்ளாகினர். பல அப்பாவிப் பொதுமக்களும் உயிரிழந்துள்ளார்கள் என்பன உண்மைதான்.

ஆனால், இந்த இழப்புக்கள் குறித்து சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவிற்கு ஏற்படும் கவலைதான் எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது; நகைப்பையும் வரவழைப்பதாகவுள்ளது.

ஒரு தேசிய இனத்தின் மீது இன ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பவர் வெளிநாடுகளில் நடைபெறும் யுத்தத்தில் அகிம்சைவாதியாகத் தன்னைக் காட்ட முற்படுவதுதான் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

உலகிலேயே 1980களில் படுகொலைகள் இலங்கையில் தான் மிக உயர்ந்தளவு நடைபெற்றன. இந்தத் தசாப்தத்தில் ஏறத்தாழ ஓர் இலட்சம் பேர் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் படுகொலைகளின் உச்ச காலமாக 1988, 1989 1990 ஆம் ஆண்டுகள் அமைந்தன. 1988, 1989 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் 60,000 க்கு மேற்பட்ட சிங்கள மக்களும் 1990 இல் 6000 க்கு மேற்பட்ட தமிழ் மக்களும் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தக் காலத்தில் இலங்கையின்

# சிறிலங்காவில் இனவெறி தூண்டும் ஒலிப்பதிவு நாடாக்கள் விற்பனை

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் இப்போது சிங்களத்தில் இனவெறியைத் தூண்டும் ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிட்டு வருகின்றது.

வடக்கு - கிழக்கு இராணுவ நடவடிக்கைகளின் போது அங்கவீனமுற்ற இராணுவ சிப்பாய்களது புனர்வாழ்வுக்காக இந்நாடாக்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஒலிப்பதிவு நாடாக்களில் இடம் பெறும் பாடல்களை பௌத்த பிக்குவான அல்லேவன்ச குணரத்ன தேரோ இயற்றியுள்ளார்; விக்டர் இரத்னாயக்கா என்ற பிரபல பாடகர்,

"எமது தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தையும் அந்நியர் கைக்கு விட மாட்டோம்" என்ற பாடலைப் பாடியுள்ளார். இவற்றை விட "நாங்கள் சிங்கக் குட்டிகள் பாரம்பரிய சிங்கள இனத்தின் வீரப் புதல்வர்கள்" என்ற பாடலும் "தாய்த்திரு நாட்டைக் காக்கப் போகும் வீரத் திருமகனே" என்ற பாடலும் இவை போன்ற வேறும் பல பாடல்களிலும் இனவாத உணர்ச்சி சிங்கள மக்கள் மத்தியில் தூண்டப்பட்டுள்ளது.

இதே வேளையில் இலங்கை இராணுவம் தனது முகாமுக்குள் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியில் இராணுவச் சிப்பாய்கள் பாடிய பாடல் ஒலிப்பதிவு நாடா ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

"நான் ஒரு இராணுவ சிப்பாய். ஆனால் பலாலி முகாமுக்குள் முடங்கிக் கிடக்கிறேன்" என்று ஒரு பாடலும் "பொத்துவிலில் நிலக்கண்ணி வெடித்தது. பொலித்தீன் பைகளில் நாங்கள் வீடுபோய்ச் சேர்ந்தோம்" என்று ஒரு பாடலும் இதில் இடம்பெற்றுள்ளது. இந்த ஒலிப்பதிவு நாடாவில் உள்ள பாடல்கள் வடக்கு-கிழக்கில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய்களின் அவலக் குரலாக வெளிவந்துள்ளன.

இலங்கை மனித உரிமைகள் காப்புக் கழகத்தின் முக்கிய உறுப்பினரும் பிரபல சிங்களப் பின்னணிப் பாடகியுமான நந்தா மாலினி இந்த ஒலிப்பதிவு நாடாக்களுக்குக் குரல் கொடுக்க மறுத்து விட்டார்; இனவாதத்தைத் தூண்டும் பாடல்களை தமது குரலால் பாட முடியாது என்பதே அவரது முடிவாகும்.

இதேவேளையில் பிரபல பின்னணிப் பாடகர் விக்டர் இரத்னாயக்கா (குரல் கொடுத்துள்ளவர்) பிரபல சினிமாத் தயாரிப்பாளர் குணரட்ணம், இசையமைப்பாளர் முத்துசாமி, ஒலிப்பதிவாளர் வாமதேவன், நெறியாளர் திருநாவுக்கரசு போன்ற தமிழர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சேவைகளை வழங்காதது மக்களுக்குச் செய்யும் துரோகம்

(சுன்னாகம்)

இன்று வடபகுதியில் வாழும் எமது மக்கள் தொடர்பு வசதிகள், மற்றும் ஏனைய வசதிகள் மறுக்கப்பட்டவர்களாகவே வாழ்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் எமது மட்டத்தில் கிடைக்கக் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளையாவது சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் எமது மக்களுக்கு நாம் செய்து கொடுக்க முன்வராவிடில் இதைவிட நாம் அவர்களுக்குச் செய்யும் துரோகம் வேறு எதுவுமாக இருக்கமுடியாது இவ்வாறு சுன்னாகம் தபால் அதிபர் இ. திருநாவுக்கரசு அவர் விருப்ப இளைப்பாறுதல் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்றுச் செல்கையில் சுபாஷ் உதவி யோகத்தர், ஊழியர் மத்தியில் விடைபெறும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

நெருக்கடியான பல காலகட்டங்களிலும் எமது தபாலகம் குடாநாட்டில் வாழும் மக்களுக்கு தனித்து நின்று பல வழிகளிலும் ஆற்றிய சேவையை எமது மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். கப்பலில் கொண்டு வரப்பட்டு விநியோகிக்க முடியாமல் பருத்தித்துறையில் தேங்கிக் கிடந்த சுமார் 800 தபாற்பொதிகளை எமது அலுவலகத்திற்கு எடுத்து வந்து பயங்கரம் நிறைந்த வேளையிலும் கூட 24 மணித்தியாலமும் இயங்கி இவற்றை மக்களுக்குமட்டுமல்ல ஏனைய திணைக்களங்களுக்கும் கூட விநியோகித்தமையினால் பல வழிகளிலும் மக்கள் பெரிதும் பயனடைந்தார்கள். அதேபோல காசுக்கட்டளைகள், பிரிட்டிஷ் போஸ்ரல் ஓடர்கள் தேசிய சேமிப்பு வைப்பிலிருந்து மீளப்பெறுதல் தர்மப்பணம் ஆகிய கொடுப்பனவுகளுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுதிலும் எங்கள் அலுவலகம் சுமார் நாற்பது இலட்சம் ரூபாவை குடாநாட்டின் மக்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது கடந்த வாரத்தில் மட்டும் ஒன்பது இலட்சம் ரூபாவைப் பல்வேறு கொடுப்பனவுகளுக்கு வழங்கியுள்ளோம். இதற்கெல்லாம் 24 மணிநேரமும் எமது சொந்த அலுவல்களைப் புறக்கணித்து விட்டு மக்கள் பற்றி சிந்தித்து செயலாற்றியதே காரணம்.

இன்று குடாநாட்டுக்குள் வேறெந்த தபால் விநியோகமும் சீராக நடைபெறுவதில்லை

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் வேண்டும்

வரவழைப்பதாகவுள்ளது.

ஒரு தேசிய இனத்தின் மீது இன ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பவர் வெளிநாடுகளில் நடைபெறும் யுத்தத்தில் அகிம்சைவாதியாகத் தன்னைக் காட்ட முற்படுவதுதான் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

உலகிலேயே 1980களில் படுகொலைகள் இலங்கையில் தான் மிக உயர்ந்தளவு நடைபெற்றன. இந்தத் தசாப்தத்தில் ஏறக்குறைய ஓர் இலட்சம் பேர் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் படுகொலைகளின் உச்ச காலமாக 1988, 1989, 1990 ஆம் ஆண்டுகள் அமைந்தன. 1988, 1989 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் 60,000 க்கு மேற்பட்ட சிங்கள மக்களும் 1990 இல் 6000 க்கு மேற்பட்ட தமிழ் மக்களும் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தக் காலத்தில் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தவர் தற்பொழுது கவலை அடைந்துள்ள ஜனாதிபதி பிரேமதாஸா ஆவார். இந்தப் படுகொலைகள் எழுபதுகளில் பங்களாதேஷில் பாகிஸ்தான் இராணுவம் புரிந்த படுகொலைகளுக்கும், வியட்னாமில் அமெரிக்க இராணுவம் புரிந்த படுகொலைகளுக்கும் கம்பூச்சியாவில் பொல்பொட் அரசாங்கம் புரிந்த படுகொலைகளுக்கும் எந்தவிதத்திலும் குறைந்தவையல்ல.

அத்தோடு இன்று படுகொலைகளைப் புரிவதற்கு சிறிலங்கா அரசாங்கம் ''பச்சைப் புலிகள்'' போன்ற உத்தியோகப் பற்றற்ற கொலைகாரப் படைகளையும் நிறுவியுள்ளது. இந்தக் கொலைகாரப் படையானது ஈரானில் மன்னரது உளவுப்படையையும், ஜேர்மனிய ஹிட்லரின் உளவுப் படையையும் போன்று சந்தேகத்திற்கு இடமானவர்களை தீர்த்துக் கட்டுவதையே தனது நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது.

மேலும் படுகொலைகள் செய்வதற்கானபுதியவழிமுறைகளையும் கையாண்டு வருகின்றது ஹிட்லர்நச்சுவாயுக்கூடங்களை படுகொலைகளுக்குப் பயன்படுத்தியது போன்றும், உகண்டா அதிபர் இடி அமீனின் ஏழு இறாத்தல் சம்மட்டியால் தலையில் அடித்துக் கொல்லுதல் - செலவு சுருக்கம் என விளக்கம் கொடுக்கப்பட்டது - போன்றும் புதியதொரு முறையாக உயிருடன் ரயர் போட்டு எரித்தல் என்பதை சிறிலங்கா அரசாங்கம் இன்று படுகொலை முறைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந் நிலையில், இலங்கை 'ஓர்' அகிம்சை நாடு என்று பிரேமதாஸா குறிப்பிடுவதைப் பார்க்கும்போது இவை எல்லாம் அகிம்சைக்குள் உள்ளடங்கும் விடயங்கள் தானா என எண்ணவைக்கின்றது.

மேலும், வளைகுடா யுத்தத்தை கண்மூடித்தனமாகப் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது என்று கூறும் சிறிலங்கா ஜனாதிபதி இலங்கையில் நடக்கும் யுத்தத்தை கண்ணால் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு இருக்கின்றாரா? அல்லது இங்கு நடப்பது யுத்தமாக அவருக்கு தெரியவில்லையா? இங்கு இறப்பது மனித உயிர்கள் என அவருக்குத் தெரியவில்லையா?

அதேவேளை மோதலைத் தவிர்த்து, தமிழர் தேசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த அழைப்பு விடுத்தனர்

அதைப் புறக்கணித்ததோடு இராணுவத்தினரை மேலும் யுத்தத்திற்கு முடுக்கிவிட்டுள்ள சிறிலங்கா ஜனாதிபதி இன்று வளைகுடா யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுகின்றார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவின் இந்தப் பேச்சானது கடந்த காலத்தில் இலங்கையில் பௌத்தம் போதித்த ''அகிம்சையினதும்'' ''கொல்லாமையினதும்'' வெளிப்பாடேயாகும்.

---

இப்பாய். ஆனால் பலாலி முகாமுக்குள் முடங்கிக் கிடக்கிறேன்'' என்ற ஒரு பாடலும் ''பொத்துவிலில் நிலக்கண்ணி வெடித்தது. பொலிஸ்திண்ணைகளில் நாங்கள் வீழ்ப்பாய்ச் சேர்ந்தோம்'' என்று ஒரு பாடலும் இதில் இடம்பெற்றுள்ளது. இந்த ஒலிப்பதிவு நாடாவில் உள்ள பாடல்கள்

விடைபெறும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

நெருக்கடியான பல கால கட்டங்களிலும் எமது தபாலகம் குடாநாட்டில் வாழும் மக்களுக்கு தனித்து நின்றுபல வழிகளிலும் ஆற்றிய சேவையை எமது மக்கள் என்றுமே

சம்ருபவை குடாநாட்டின் மக்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது கடந்த வாரத்தில் மட்டும் ஒன்பது இலட்சம் ரூபாவைப் பல்வேறு கொடுப்பனவுகளுக்கு வழங்கியுள்ளோம். இதற்கெல்லாம் 24 மணிநேரமும் எமது சொந்த அலுவல்களைப் புறக்கணித்துவிட்டு மக்கள் பற்றி சிந்தித்து செயலாற்றியதே காரணம்.

இன்று குடாநாட்டுக்குள் ளேயே தபால் விநியோகம் சீராக நடைபெறுவதில்லை என மக்கள் குறை கூறுகிறார்கள். முதல்நாள் பெட்டிகளில் போடப்படும் கடிதங்களை மறுதினமே மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படின் தொடர்பு வசதிகள் அற்ற மக்களுக்கு பலவழிகளிலும் இது நன்மைதரும். கொழும்பிலிருந்து தினமும் பயணிகள் வடபகுதி வருகிறார்கள். அவர்கள் பல கடிதங்களை கொழும்பிலிருந்து எடுத்துவந்து தபால் பெட்டிகளில் போட்டுவிட்டுச்செல்கிறார்கள். இவற்றை நாம் கிரமமாக சேகரித்து விநியோகித்தாலே தகவல்கள் உடனுக்குடன் பரிமாற்றப்படலாம். இதைக் கூட எம்மால் செய்ய முடியாவிட்டால் தபால் சேவை என்ற ஒன்று இருப்பதில் அர்த்தமே இல்லை எனவும் தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்து மீண்டும் தமது வேலைக்குத் திரும்ப முடியாத சகல ஆசிரியர்களுக்கும் யாழ். மாவட்டத்திற்கு தற்காலிக இடமாற்றம் வழங்க வேண்டும் என்றும் யாழ். மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் இடைக்காலப் பகுதிக்கு விசேட லீவு வழங்கி அக்காலப்பகுதிக்கான முழுச் சம்பளத்தையும் வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேற்படி தீர்மானத்தை வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் நேரடிக் கவனத்திற்கு விரைவாகச் சமர்ப்பித்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த. டானியல் சிவம் மேற்கொள்ளவுள்ளார்.

வேலைக்குத் திரும்ப முடியாத ஆசிரியர்களில் சிலர் இராணுவத்தாலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் தேடப்படுகின்றனர் என்றும் சிலரது பெற்றோர்கள் அல்லது சகோதரர்கள் இராணுவத்தால் சில மாதங்களுக்கு முன்னர் கைதாகியதைத் தொடர்ந்து அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி தெரியாமையினாலும் சிலரது வீடுகள் இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டமையாலும் அங்கு திரும்ப முடியாத சூழ்நிலை இருப்பதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பாதுகாப்பு அவதானிப்பு

வளைகுடாப் பகுதியிலுள்ள இலங்கையர் பாதுகாப்பைத் தொடர்ந்தும் அவதானித்து வருமாறு ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சரைக் கேட்டுள்ளார்.

வளைகுடாவில் இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சருக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வகுப்புக்கள் நடத்த யோசனை

(கொழும்பு)

கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களில் வழமையான பாடசாலை நேரத்திற்குப் பின்னரும் வகுப்புகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கு ஆசிரியர் பற்றாக்குறை எதிர்நோக்கப்பட்டால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் சேவையும் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அந்த அமைச்சு தெரிவித்தது.

## நடமாடும் ஏவுகணை தளங்கள்

(வாஷிங்டன்)

ஈராக்கிடம் முப்பது முதல் நாற்பது நடமாடும் ஏவுகணை செலுத்தும் வாகனங்கள் இருக்கக்கூடும் என்று அமெரிக்கப்பாதுகாப்புத்துறை அமைச்சர் டிக்ஜெனி குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிறு வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய டிக்ஜெனிபிராக் இடம் நிலையாக பொருத்தப்பட்டிருந்த ஏவுகணை செலுத்தும் கருவிகள் யாவும் பன்னாட்டுப் படையினரின் முதல் குண்டு வீச்சுத்தாக்குதலிலேயே அழிக்கப்பட்டு விட்டன என்றும் தெரிவித்தார்.

அத்தேவேளை இந்தப்போர் இப்போதைக்கு முடியாது என்றும் மூன்று மாதங்கள் வரை நடக்கக் கூடிய சாத்தியம் இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

# இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் இருந்து இராணுவத் தாக்குதலுக்கு அச்சத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு யாழ். செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மக்களுக்கு உடனடியாக இரண்டு நாட்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் விசேட இலவச உலர் உணவு விநியோகத்தின் 4ஆம் கட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் 3200 குடும்பங்கள் கரவெட்டியிலும், 1500 குடும்பங்கள் பருத்தித்துறையிலும், 500 குடும்பங்கள் மருதங்கேணியிலும் தங்கியுள்ளனர்

இவர்களுக்கான மேற்படி நிவாரண நடவடிக்கைகளை இந்தப் பகுதிகளின் உதவி அரசாங்க அதிபர்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (க)

### மாகாணசபைத் திட்டத்தின்கீழ்

## பணிக்குச் சென்றோர் வீடு செல்லப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் திட்டத்தின்கீழ் யாழ். செயலகத்தில் 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் நேற்று மதியம் ஒரு மணியில் இருந்து வீட்டிற்கு சென்றுவிடும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இந்த ஒன்பது செயலக உத்தியோகஸ்தர்களும் கடந்த வருடம் நிறுத்தி வைக்கப்பட்டு பின் மீண்டும் பணியைத்தொடர அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இப்பொழுது மீண்டும் அவர்கள் தமது பதவியை துறந்து வீட்டில் நின்றுவிடும்படி உத்தரவு இடப்படும்வரை இவர்கள் செய்த ஐந்துமாத சேவைக்கு எந்தவித சம்பளமும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

சர்வதேச செஞ்சிலுவை

என்றும் தாம் மருந்துகளை எடுத்து வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் முற்பணம் கொடுத்து பல மாதங்களாகியும் மருந்துப் பொருட்களை எடுத்து வரும் முயற்சி வெற்றிபெறவில்லையென்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் கருத்து வெளியிடுகையில் யுத்தகாலத்தில் மருத்துவ சேவை மேற்கொள்ளுவதற்கென இலங்கையின் பல பகுதிகளிலும் நிலைகொண்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரே மருந்துப் பொருட்களை வட பகுதிக்கு எடுத்து வருவதற்கு கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் மறுத்து வருகின்றது. இந்த நிலையில் எமது மக்களை நோயின் அபாயத்தில் இருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடுபட வது நாம் மருந்துப் பொருட்களை தரு

யாழ். குடா

படுகாயமுற்றார். மேலும் எஸ். நல்லதம்பி, எஸ். கந்தசாமி, திருமதி செல்வராசா ஆகியோரின் வீடுகளும், ஸ்ரீ சந்திரா தனியார் கல்வி நிலையமும் சேதமடைந்தன. (செ. த. மை. 85)

**வேம்பிராயில்**

வேம்பிராய்ப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணி ஐம்பது நிமிடத்திலிருந்து சுமார் ஒரு மணி நேரமாக மூன்று குண்டுவீச்சு விமானங்கள் ஒரு வை 12 ரக இராட்சத விமானம் மூன்று ஹெலிகொப்ரர்கள் ஒரு அவ்ரோ ஆகியன இடைவிடாது குண்டுகளை வீசி பெரும் சேதத்தை விளைவித்தன (செ. த. மை)

**மீசாலை, சரசாலை**

நேற்று மீசாலை பகுதியிலும், சரசாலை பகுதியிலும் ஹெலியிலிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன. சரசாலையில் நடைபெற்ற ஒரு குண்டுவீச்சில் யோகேஸ்வரன் மணி என்பவர் காயமுற்றார். (செ. த. மை.)

**வேலணையில்**

...முற்றன. இதில் ந. ஆனந்தலிங்கம் என்பவர் காயமடைந்தார். (14, 15)

**மானிப்பாயில்**

மானிப்பாய் பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு குண்டுகளை வீசின. காலை 11 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் வைரவர் கோயிலும் சிறு சேதங்களுக்கு உள்ளாயின. (செ. த. மை 85)

**காரைநகரில் ஷெல் எறி**

நேற்றுப் பகல் 11 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து கருங்காலிப் பக்கமாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

**நெடுங்கேணி**

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நெடுங்கேணி நகர்ப் பகுதியில் ஹெலிகொப்ரர் ரொக்கட் மோட்டார் தாக்குதலில் ஒரு கடை பலத்த சேதமுற்றது.

**அச்சுவேலியில்**

அச்சுவேலி வளலாய், இடைக்காடு, தம்பனை ஆகிய பகுதிகளை தாக்கி ஷெல் தாக்குதலும், விமான குண்டு

## நயினாதீவில் கடற்படை இளைஞர் மீது தாக்குதல்

(புங்குடுதீவு)

நயினாதீவில் சில இளைஞர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர். சில தினங்களுக்கு முன்னர் சில படையினர் சைக்கிள்களில் ஊர் மனைக்குள் ரோந்து சுற்றி வந்த சமயம் அதிவேகமாக சைக்கிள் ஓட்டிச் சென்ற சில இளைஞர்களை முகாமிற்கு அழைப்பித்து அவர்களை நையப்புடைத்து அனுப்பினராம். அத்துடன் அவர்களின் சைக்கிள்களையும் பறித்து வைத்துவிட்டு சில தினங்களுக்குப் பின்னர் சைக்கிள்களை ஒப்படைத்து வேகமாக சைக்கிள் ஓட்டவேண்டாம் என எச்சரிக்கை செய்துள்ளனராம். (22)

## வவுனியாவில் இராணுவம் தொடர்ந்து ஷெல் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இராணுவத்தினரின் இந் நடவடிக்கை காரணமாக நகரப் பகுதியை அண்டிய இடங்களில் வாழும் மக்கள் பாதுகாப்புத் தேடி வேறிடங்களை நோக்கிச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி வவுனியா நகரப் பகுதியை நோக்கிச் சென்ற மக்கள் அனைவரையும் இராணுவத்தினர் திருப்பி அனுப்பி விட்டதைத் தொடர்ந்து யாழ் வவுனியா பிரதான வீதி வெறிச்சோடிக் காணப்பட்டது. (தி

## வாகன உரிமையாளர் கூட்டம்

வடபிராந்திய பொதிசுமக்கும் வாகன உரிமையாளர்கள் சங்கத்தின் கூட்டம் இன்று 23-1-1991 புதன் மாலை 3 மணிக்கு சங்கத் தலைவரின் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். சில முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்க இருப்பதால் அனைத்து வாகன உரிமையாளர்களும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**விலை நிர்ணயத்தைத்**

லைத் தொடர்ந்தே அத்தியாவசியப் பொருள்களுக்குவிலைகள்நிர்ணயம்செய்யப்பட்டன

மொத்த வியாபாரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொரு

## கப். வல்லபனின் நினைவஞ்சலிக் கூட்டம்

(தெல்லிப்பழை)

இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது இளவாலைப் பகுதியில் வைத்து சயனைற் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட கப்டன் வல்லபனின் 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 5.30 மணிக்கு அளவெட்டி மாவீரர் கலை அரங்கில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த பல முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். (ச)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ராமநாதன் மண்டபத்தில் இடம்பெறும். அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு மட்டக்களப்பு, அம்பாறை மாணவர் ஒன்றி

வெளியிடுகையில் யுத்தகாலத்தில் மருத்துவ சேவை மேற்கொள்ளுவதற்கென இலங்கையின் பல பகுதிகளிலும் நிலைகொண்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கே மருந்துப் பொருள்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் மறுத்து வருகின்றது. இந்த நிலையில் எமது மக்களை நோயின் அபாயத்தில் இருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடுபட்டு வது நாம் மருந்துப் பொருள்களை தருவிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்களும் தமக்கு இதுவரை மருந்துப் பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி கிடைக்கவில்லை என்று கருத்து வெளியிட்டனர். (ஈ)

கொப்டர்கள் ஒரு அவ்ரோ ஆகியன இடைவிடாது குண்டுகளை வீசி பெரும் சேதத்தை விளைவித்தன. (செ. த. மை)

**மீசாலை, சரசாலை**

நேற்று மீசாலை பகுதியிலும், சரசாலை பகுதியிலும் ஹெலியிலிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன. சரசாலையில் நடைபெற்ற ஒரு குண்டுவீச்சில் யோகேஸ்வரன் மணி என்பவர் காயமுற்றார். (செ. த. மை.)

**வேலணையில்**

நேற்று மதியம் 12 மணியளவில் வேலணையில் குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு குண்டுவீச்சு தாக்குதலை நடத்தின. அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் வீசப்பட்ட குண்டினால் வேலணை மருத்துவமனை உட்பட பல பொது கட்டடங்கள் சேத

...பக்கமாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

**நெடுங்கேணி**

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நெடுங்கேணி நகர்ப் பகுதியில் ஹெலிகொப்ரர் ரொக்கட் மோட்டார் தாக்குதலில் ஒரு கடை பலத்த சேதமுற்றது.

**அச்சுவேலியில்**

அச்சுவேலி வளலாய், இடைக்காடு, தம்பனை ஆகிய பகுதிகளை தாக்கி ஷெல் தாக்குதலும், விமான குண்டு வீச்சுக்களும் இடம் பெற்றன. அப் பகுதி மக்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளனர். (செ த. மை.)

**சிறுப்பிட்டியில்**

சிறுப்பிட்டி தெற்கில் உள்ள அப்பாவிப் பொது மக்கள் மீது போர் விமானங்கள் குண்டுகளை வீசியதில் ஐவர் காயமடைந்தனர். இவர்களில் மூவர் சிறுவர்களாவர். ச.சிவச்செல்வி (வயது 13), ச. ஜெயச்செல்வி (வயது 13), கு. வசந்தன் (வயது 3), ச. செல்லம்மா (வயது 43) கு. நிர்மலா (வயது 33) ஆகியோர் அங்குகாயமடைந்தனர்

**புத்தூர்**

புத்தூர் கிழக்கு அரசினர் வைத்தியசாலைக்கு அருகே உள்ள வீட்டிற்கு வீசப்பட்ட குண்டால் இருவர் படுகாயமடைந்தனர் இந்தக் குண்டு வீச்சு ஹெலிகொப்ரர் ஒன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. க. நகுலேஸ்வரன் (வயது 6), திருமதி சசிகலா (வயது 19) ஆகியோர் காயமடைந்தோராவார்.

## கொப்பி விற்பனை

(யாழ்ப்பாணம்)

மாணவருக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிவகைகள் மற்றும் உபகரணங்களும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் தமிழருவியில் விற்பனையாவதை நேற்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இங்கு தேவையான கொப்பிகளை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரியவருகின்றது.

...கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். சில முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்க இருப்பதால் அனைத்து வாகன உரிமையாளர்களும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**விலை நிர்ணயத்தைத்**

லைத் தொடர்ந்தே அத்தியாவசியப் பொருள்களுக்கு விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டன

மொத்த வியாபாரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொருள்களின் விலை பாதிக்காதென்றும், அதிக விலை கொடுத்து பொருள்களைக் கொள்வனவு செய்த சில்லறை வியாபாரிகளே அதிக நட்டம் அடைய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சில்லறை வியாபாரிகள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

பாவனையாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட பொருள்களின் விலைகள் குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் அதேவேளையில் குறிப்பிடப்பட்ட பொருள்கள் திடீரென்றுமாயமாகமறைந்து விடதற்குக் கவலை தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் பத்திரிகைகளில் இதுசம்பந்தமான செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து பாவனையாளர்கள் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களைப்பெற முடியாமலிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நேற்றுக்காலை சாவகச்சேரிப்பகுதியில் கட்டுப்பாட்டு விலையின்படி 1லீற்றர் மண்ணெண்ணெய் 30 ரூபாவாக விற்கப்படவில்லையென்றும் அது 100 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டதென்றும் நமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

ஒரு சவர்க்காரக்கட்டி 8 ரூபா 25 சதமென நிர்ணயிக்கப்பட்டிருந்தும் உடுவில் பகுதியில் 17 ரூபா 50 சதமாக விற்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்தியொன்று தெரிவிக்கின்றது. மேலும் பல இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் அமுல்படுத்தப்படவில்லை என்றும் மாவும், மண்ணெண்ணெயுமே அதிகமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

...கள். (ச)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ராமநாதன் மண்டபத்தில் இடம்பெறும். அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு மட்டக்களப்பு, அம்பாறை மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது.

## குழந்தை வார்ட் திறக்க முயற்சி

(மானிப்பாய்)

தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் குழந்தைகளுக்கான தனியான வார்ட் ஒன்று அமைக்கும் முயற்சியில் வைத்திய வட்டாரங்கள் ஈடுபட்டு வருகின்றன. விரைவில் இவ் வார்ட் அமைக்கப்பட்டதும் குழந்தைகளுக்கு சிகிச்சை வழங்குவதிலும் பராமரிப்பதிலும் இருந்துவந்த குறைபாடுகள் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## கிணற்றினுள் தவறி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றடியில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஒன்று கிணற்றினுள் தவறி வீழ்ந்து மரணமாகியுள்ளது.

நாவற்குழியைச் சேர்ந்த செபஸ்ரீபன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே நேற்று முன்தினம் இவ்வாறு பரிதாபகரமாக மரணமாகியுள்ளது. (மு)

**மிதிவெடி**

மூன்று மிதிவெடியில் சிக்கினர்

இதேபோலபாலையடிவெட்டையிலும் மூன்று மிதிவெடிகள் வெடித்தன. இந்த மிதிவெடி வெடித்தமையினால் இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற தலைமை ஆசிரியர் P. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி இராசம்மா 22-01-91 இல் சிவபதம் அடைந்தார். இவர் சுந்தரதாஸ் (முன்னாள் அதிபர் மெம்மோரியல் கல்லூரி மானிப்பாய்), பேபின்பராணி (ஆசிரியை இணுவில் சைவமகாஜனா) ஆகியோரின் தாயாரும், ருக்மணி (இளைப்பாறிய கல்வி அதிகாரி, யாழ். கல்விக் கந்தோர்) வெ. ஏகாம்பரநாதன் (ஆசிரியர் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரின் மாமியும், துஷ்யந்தி, பாலமோகன், தேவந்தி, யோகநாதன், ஏ. தேவநேசன் (மருத்துவ மாணவன் யாழ். பல்கலைக் கழகம்), ஏ ஜெயமோகன், ஏ., ஜெகதீசன் (யாழ். இந்துக் கல்லூரி), ஏ செந்தில்நாதன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ஏ ஸ்ரீரங்கன் (மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பளை) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23-01-91) புதன்கிழமை மருதனாமடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், பூவோடை மயானத்தில் பிற்பகல் 2 மணிக்கு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

மருதனாமடம்,
சுன்னாகம்.
(R/1046)

தகவல்:
வெ. ஏகாம்பரநாதன்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.